ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 4. பூரண சந்திரன் அரசியற் சருக்கம்

357. அமிர்தகரன் ஒளியின் முனி அறவுரை சென்றெறிப்பத்
திமிரமென நின்றவினை தீர்த்தெழுந்த மதியிற்
குமுதமென மலர்த்துவதம் ஆற்றுவன கொண்டே
அமலனடி மனக்கமலத் தருக்கனில் வைத்தெழுந்தான்.

முழுமதியின் குளிர்ந்த ஒளிக்கதிர்கள் படிந்தவுடனே மலரும் அல்லி மலரைப் போல் வரதர்ம முனிவரின் அறவுரைகளைக் கேட்டு அறியாமை இருள் நீங்கி துலக்க மெய்திய பத்திரமித்திரன் மகிழ்ந்து தனது ஆற்றலுக் கேற்ப விரத ஒழுக்கங்களை மேற்கொள்ள உறுதி பூண்டு குற்றமற்ற கதிரவன் போன்ற இறைவனது அடிகளைத் தனது இதயத் தாமரையில் ஏற்றவனாய் நகரத்திற்குப் புறப்பட்டான்.

358. எழுந்து முனியிருகமல பாதந் தொழு தேத்திச்
செழுங்கனக மாடமிசைச் சீயுரம் புக்கு
முழங்கி யெழுமுகிலிற் பொருள் முழுதும் வறியோர்க்கு
வழங்க மனத் தழுங்கி யுரைத்தாள் அவன் தன் மாதா.

வரதர்ம முனிவரது பாத கமலங்களை வணங்கித் தொழுது சீயமாபுரத்தேயுள்ள வளமிக்க தனது மாளிகையை அடைந்த பத்திரமித்திரன் முழங்கும் மழை மேகத்தைப் போல் தனது செல்வம் அனைத்தையும் வறியோர்க்கு வழங்கத் தொடங்கினான். அதைக் கண்ட அவனது அன்னை மிகவும் வருந்தி மனம் புழுங்கி மகனை நோக்கிக் கூறினாள்.

359. குலம் பெரிய குணம் அறிவு வடிவு குடிப்பிறப்பு
பொலங் கையுடை யவர்க்கலது புகழ்ச்சி யினிதடையா
இலங்கு மனையாளும் பொருளில்ல விடத்து இகழும்
அலங்கல் வரை மார்ப்ப பொருளாதல் இனி அழியேல்.

மலைபோன்ற மார்பினையுடைய மகனே; உயர்குலம், நற்பண்பு, நல்லறிவு, அழகு, குடிப்பிறப்பு, புகழ் இவையனைத்தும் செல்வமுடையவர்க்கே சேரும், பொருள் இல்லையேல் நல்ல பண்புடைய மனைவியும் மதிக்காது இகழ்வாள். எனவே இருக்கும் செல்வத்தை வீணாக அழிக்காதே என்றாள்.

360. காதல் மிகு தாய்மொழியில் ஆதரம் ஒன்றின்றிப்
போதர வெணாது பொருள் முழுதும் அவன் ஈயக்
கோதம் எரி போன்றவனைக் கொல்லும்படி சூழ்ந்து
தீது தனக்காக்கி மனம் சிதைந் தொழுகும் வழிநாள்.

ஆசையுடன் அன்னை கூறியவற்றில் கொஞ்சமும் ஆர்வம் காட்டாத பத்திரமித்திரன் தனது செல்வத்தைப் போற்றிக்காக்க வேண்டுமென்ற எண்ணமின்றி இருப்பவற்றை ஏற்போர்க் களிக்கக்கண்ட தாயானவள் மகன் மீது தீ நிகர் செற்றம் கொண்டவளாய் இவனை ஒழித்து விட்டால் என்ன என்ற எண்ணம் கொண்டவளாய் அது பற்றியே சிந்தித்து மனம் கொதித்து அவன் மூலம் பாபத்தை மிகுதியாகச் சேர்த்து தனது வாழ்வைக் குலைத்து அமைதி இழந்து கிடந்தாள்.

(வேறு)

361. ஆங்கவன் தன் சொன் மறுத்த அழற்சியினும் பொருள்கள்
நீங்க எழும் ஆர்த்தத்தினும் அவ்வுடம்பு நீத்துப்
பூங்குழலி ஓங்கிய அதிங்கவனம் புக்கு
வேங்கை மகவாய் மகன்கண் வேரத்தொடும் பிறந்தாள்.

அழகுமிக்க கூந்தலையுடைய சுமித்திரையானவள் தனது பேச்சைக் கேட்க வில்லையே என்ற ஆத்திரத்தினாலும், செல்வமெல்லாம் அழிகிறதே என்ற வருத்தத்தினாலும் வாழ்வு முடிந்து அந்நகரின் அண்மையிலுள்ள ஓர் வனத்தில் மகன் மீது வைத்த வைரத்துடன் புலிக்குட்டியாகப் பிறந்தாள்.

362. அருளினால் உயிர்கட்கு ஈந்த அப்பொருள் நிமித்தமாக
வெருவினால் மயங்கி வாழும் விலங்கில் இவ்வேழைத் தோற்றம்
இருள் இலாத் தேவர் கோயிற்கு இட்டதோர் விளக்கின் மேலே
மருளினால் விட்டில் பாய்ந்து மரித்ததே போல்வ தொன்றே.

தனது மகன் மற்றவர்கள் மீது அருள் கொண்டு வழங்கிய செல்வமே காரணமாக (அதாவது அச்செல்வம் போகின்றதே என்ற எண்ணத்தினால்) எப்போதும் அச்சத்துடன் வெருவி வாழ்கின்ற விலங்குப் பிறவியாக அந்தப் பேதைப் பெண் இவ்வாறு பிறந்த நிலை, இருளற்ற இறைவனது ஆலயத்தில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கில் மயங்கி விழுந்து மடிந்த விட்டில் பூச்சினைப் போலிருந்தது.

363. அப்பச்சக் காணமாய கோப லோபத்தினாலே
செப்பட்ட பிறவியாள் அவ்வனத்திடைத் திரியும்
கைப்பட்ட பொருளை எல்லாம் கருணையால் ஈயும் அந்த
மெய்ப்பட்ட புகழினான் அவ்வனத்திடை விரகிற் புக்கான்,

செயல்படாமல் மனத்தளவில் தொடர்ந்து நின்ற அவளது செற்றம், செருக்கு, மயக்கம் மிக்க மனநிலை காரணமாக முன் கூறிய வண்ணம் புலியாகப் பிறந்து வளர்ந்து வனத்தில் திரிந்து வரும் காலத்தில் ஒரு நாள் தனது கைப்பொருளையெல்லாம் அருளுடன் வறியவர்க்கீயும், உயர்புகழினையுடைய பத்திரமித்திரன் அக்காட்டின் எழிலைக் காண மகிழ்ச்சியுடன் வந்தான்.

364. காரணம் தான் ஒன்றின் றிக் கருமத்தின் பெருமையாலே
வார் அணிந்து இலங்கும் கொங்கை மங்கையரோடு அவ்வள்ளல்
தாரணி சோலைக் குன்றம் தன்னுளே திரியும் போழ்தில்
வேர நின்று இலங்கும் சிந்தை வேங்கை நின்றதனைக் கண்டான்.

அவனுடன் வந்த கச்சணிந்த அழகிய பெண்களுடன் அவ்வள்ளல் மகிழ்ச்சியாக சுற்றிப் பார்க்கின்ற போது முன் வினைப் பயனால் காரணம் ஒன்றுமில்லாமல் உள்ளத்தில் வைரத்துடன் தன்னையே நோக்கி நின்ற அப்புலியினைப் பத்திரமித்திரன் பார்த்து விட்டான்.

365. கண்டவன் பெயரும் எல்லைக் கடியதோர் பசியினாலும்
எண்திசை யவரும் நிற்ப எழுந்த வேரத்தும் ஓடி
விண்டு ளரி விளக்கின் மேலே விட்டில் பாய்ந்திட்டதே போல்
தண்டிவர் தோளினான் மேல் தாய்ப்புலி பாய்ந்ததன்றே.

கண்டவுடனே அதனிடமிருந்து தப்ப வேண்டுமென்ற எண்ணத்துடன் அப்பாற் செல்ல முற்பட்டான். அதே நேரத்தில், மிக்க பசியுடனும், சினத்துடனும் நின்ற புலியானது சூழ்ந்து நின்ற மற்றவர்களை விட்டு விட்டு விரைந்து ஓடி மிக்கு எரிகின்ற விளக்கிலே பாய்ந்து விளக்கினை அவித்த விட்டில் பூச்சினைப்போல் வணிகன் மேல் பாய்ந்து இரும்புத் தண்டினைப் போன்ற தோள்களையுடைய அவனைக்கொன்றது. (அவனை ஈன்ற தாயாகவும் அப்புலிதான் முற்பிறவியில் இருந்தது).

366. வேபியா பசியின் வாடி விழும் உயிர்க்கு ஈயக்கண்டு
கோபியா வஞ்ச நெஞ்சிற் கருணை ஒன்றின்றிச் செத்தும்
தீபியாப் பிறந்து நின்று மகனையும் தின்ற இந்தப்
பாபியைப் போல கில்லார்க் கருணையைப் பயில்கை நன்றே.

வாட்டும் பசியினால் சோர்ந்து விடுகின்ற ஹியோர்க்கு உதவியதைக் கண்டு மனம் பொறாது அருளின்றி சினம் மிக்கு வஞ்ச உள்ளத்துடன் இறந்தபிறகும் புலியாகப் பிறந்து காட்டில் திரிந்துமுன்பு தனது மகனாக இருந்தவனைக் கொன்று தின்ற இந்தக் கொடியவளைப் போல் இராமல் அருளுடன் வாழ்தல் நல்லது.

367. பிறவிகள் அனந்தம் தம்மில் பெற்றதாய்ச் சுற்ற மல்லால்
உறவிகள் ஒன்றுமில்லை ஊனினை உண்டு வாழ்வார்
மறமலி மனத்தராய்த் தம் மக்களைத் தின்கின்றார் என்று
இறைவனை இவள் உரைத்தாள் இன்று தன் மகனைத் தின்றாள்.

எண்ணற்ற இப்பிறவிகளில் அன்னையாகவும் மற்ற உறவினர்களாகவும் இராதவர்கள் யாருமே இல்லை. எனவே ஊனினை உண்டு வாழ்பவர் கொடியமன முடையவராய் தங்கள் மக்களையே தின்று வாழ்கின்றார்கள் என்று உரைத்த இறைவனது நீதிகளை எடுத்து மற்றவர்களுக்குக் கூறிய இந்தச் சுமித்திரையானவள் இப்போது தானே தனது மகனைத்தின்றாள். நீதியறிந்தும் இந்நிலைக்கு ஆளானாள்.

368. கருதினார் கருதிற் றெல்லாம் கருணையால் ஈயும் கற்பத்
தருவின்மேல் உருமு வீழ்ந்து சாய்ந்தது போல மாய்ந்து
பருமத யானை வேந்தன் தேவிமேல் பற்றுள்ளத்தால்
திருமகளனைய ராமதத்தை தன் சிறுவனானான்.

வேண்டியவர்கட்கு வேண்டியவற்றைத் தயவுடன் வழங்கும் கற்பகத்தரு இடியினால் சாய்ந்தது போல், புலியால் மடிந்த பத்திரமித்திரன் பருத்த மத யானைகளையுடைய வேந்தனது மனைவி இராமதத்தையின் மீது கொண்ட அன்பின் காரணமாக அவள் கருவிலே மகனாக அடைந்தான்.

369. கண்ணிடை வெளுப்பெலாம் போய் முகத்திடை பரக்கக் காணா
நுண்ணிடை தோன்ற விம்மா கண்ணகில் கறுத்த நோக்கிப்
பண்ணிடை கிடந்த தீஞ்சொல் பவழவாய் பாண்டுவாக
மண்ணிடைத் தோன்ற மைந்தன் மதிபெற்ற திசையை ஒத்தான்.

கருவுற்ற இராமதத்தா தேவியின் கண்ணின் வெளுப்பு மறைந்து முகத்தில் சென்றது போல் முகம் வெளுத்தது. நுண்ணிய இடை சற்று பருத்துத் தோன்ற முலைக்கண்கள் கருப்பாகி இனிமையாகப் பேசும் பவழம் போன்ற சிவந்த வாயானது வெண்மையாக இவ்வாறு நிறைவுற்று கருவிலே வளர்ந்த மகன் இவ்வுலகில் பிறந்தான். மகன் பிறந்ததைக் கேட்ட மன்னன் முழுமதி தோன்றியதும் ஒளிரும் திசை போல் பெரிதும் மகிழ்வெய்தினான்.

370. வேய் எனத்திரண்ட மென்தோள் மெல்லியலோடும் வேந்தன்
ஆயிரக் கிரணன் சென்ற திசையொடு வானை ஒத்துப்
பாயிரும் பரவை ஞாலம் பைம் பொனால் ஆர்த்தி நாமம்
சீய சந்திரன் என்று ஓகைத் திசைதொறும் போக்கினானே.

மூங்கிலைப்போல் திரண்ட மென்மையான தோள்களையுடைய நல்லியல்பு மிக்க இராமதத்தையுடன் மன்னன் சீயசேனனும் கதிரவன் செல்லும் திசைபோல் ஒளிமிக்க உள்ளத்தனாகி மிகப்பெரிய கடலால் சூழ்ந்த இவ்வுலகத்துள்ளவர்க்குப் பொன்னையும் பொருளையும் வாரிவழங்கி மகனுக்குச் சிம்மச்சந்திரன் என்னும் பெயர்சூட்டி இம் மகிழ்ச்சியான செய்தியை மற்ற மன்னர்களுக்கும் தெரியப்படுத்தினான்.

371. நலிவிலாத் தடத்துள் நின்ற நளினம் போல் வளர்ந்து நண்ணார்
குலமெலாம் மெலிய வாங்கும் கொடுஞ் சிலைப் பயின்று குன்றாக்
கலையெலாம் கடந்து காமம் கனிந்தன கமல மொட்டின்
முலைநல்லார்ச் சேர்ந்தினார்கள் முருகுண்ணும் வண்டை ஒத்தான்.

நீர் நிறைந்த குளத்தில் நிலைபெற்ற தாமரைபோல் மகன் வளர்ந்து பகைவர்தம் குலம் நலியும் வண்ணம் கொடியவிற்கலையைப் பயின்று, மற்ற அனைத்துக் கலைகளையும் கற்றுத் தேர்ந்து, மனதை மயக்கும் தாமரை மொட்டினை நிகர்த்த முலைகளையுடைய அரச குமாரத்திகளை முறைப்படி மணந்து தேனுண்ணும் வண்டுபோல இன்பத்தை நுகர்ந்தான்.

372. சிலமயில் சூழச் செல்லும் சிங்க போதகத்தைப் போலக்
கலைபயில் அல்குலாரும் குமரனும் கழுமு நாளுள்
கொலைபயில் களிநல்யானைக் கொற்றவன் தேவி தன்பால்
மலைமிசை மதியம் போல மைந்தன் மற்று ஒருவன் வந்தான்.

மயில்கள் சூழச்செல்லும் ஆண்சிங்கத்தினைப் போன்ற இளவரசனும் மேகலையணிந்த மகளிரும் இன்பமாக இருக்கும் நாளில், கொலைத் தொழில் மிக்க யானைகளையுடைய சீயசேன மன்னனது மனைவி இராமதத்தைக்கு மலையில் உதித்த முழுமதிபோல் இரண்டாவது மகன் பிறந்தான்.

373. இரவலர் என்னும் முன்னீர் இடர்கெட எழுந்த அந்தப்
புரவல குமரன் நாமம் பூரசந்திரன் என்றார்கள்
கரை பொருகடலம் தானைக் காவலகுமரர் வானத்து
இரவியும் மதியும் போல இருநிலத்தியலும் நாளால்.

அப்போது மன்னன் மகிழ்ந்து இரவலர் என்னும் கடலில் வறுமை என்னும் அலைகள் கெடும் வண்ணம் வந்து தோன்றிய அரசகுமாரனுக்குப் பூரணச் சந்திரன் எனப் பெயரிட்டான், கரையில் மோதுகின்ற அலைமிக்க கடல்போன்ற படைகளையுடைய அவ் அரச குமாரர்களிருவரும், சூரிய சந்திரர் போல இவ்வுலகில் வளர்கின்ற நாளில்,

(வேறு)

374. வாரிசூழ் வலயம் துயர் எய்திடின்
தாரியான் அது தானுடன் எய்திடும்
ஏரணித்துலகின் புறின் இன்புறும்
மாரிபோல் கொடை வண்கை அம்மன்னனே.

மழைமுகில் போன்ற கொடைவள்ளலாகிய மன்னன் சிம்மசேனன், கடல் சூழ்ந்த வட்டமான இம் மண்ணுலக உயிர்கள் துயரமெய்தின் தானும் அதுபெறாது துயரமெய்தி, உலகு நலம்பெற்று மகிழும்போது தானும் மகிழ்ச்சி எய்துவான்.

375. பொன்னும் நன்மணியும் புனை பூண்களும்
மன்னும் பொன்னறை மற்றொரு நாள்புக
பன்னகம் முன்னம் ஆயவன் பார்த்திடா
மின்னின் வேரத்தின் வீழ்ந்து எயிறு ஊன்றினான்.

ஒரு நாள் மன்னன் சீயசேனன் பொன்னும், மணிகளும், அணிகளும் நிறைந்துள்ள தனது கருவூலத்தைக் காண்பதற்காகச் சென்றான். அப்போது முன்பு அமைச்சனாக இருந்து இப்போது பாம்பாக அங்கே உறைந்து வரும் அந்தக் கொடியவன் கண்டு வைரத்தோடு மின்னலைப்போல் விரைந்து மன்னன்மேல் விழுந்து தனது நச்சுப் பற்களினால் மன்னனைக் கடித்தான்.

376. பையரவின் விடத்தொடு பார்மிசை
மையலுற்று விழுந்தனன் மன்னவன்
வெய்யவன் அரவத்தொடு மேதினி
வைய நைய விழுந்தது போலவே.

அடுத்த கணமே கதிரவன் இராகுடன் சேர்ந்து இம்மண்ணுலகில் வீழ்வது போல், படத்தினையுடைய பாம்பின் விடத்துடனும், பாம்புடனும் மன்னன் மயங்கி இவ்வுலகம் வருந்துமாறு தரையில் விழுந்தான்.

377. கல்லென ஓசைகடல் உடைத்திட்டென
எல்லையின்றி எழுந்தது யாவரும்
சொல்லும் மெய்யும் மறந்தனர் சோர்ந்தனர்
மல் இயங்கு புயத்திரள் மைந்தரும்.

மன்னனது இந்நிலையறிந்தவுடனே கரையுடைத்துக் கடல் வெளிப்பட்டது போல் 'அந்தோ' என்னும் ஒலியானது அளவு கடந்து எழுந்தது. மற்போரிலே சிறந்த தோள்களையுடைய அரசகுமாரர்களும் மற்றவர்களும் பேச்சிழந்து செயலற்றுச் சோர்வெய்தினார்கள்.

378. இராமதத்தையும் இன்னுயிர் அன்பினால்
விராமம் உற்றதோர் மஞ்சையின் வீழ்ந்தனள்
கரா மறிக்கடல் சூழ்படிக் காவலன்
இராமையால் பகலும் இரவானதே.

மன்னனது உயிர்போன்ற மிக்க அன்புடைய இராமதத்தா தேவியும் உயிர் நீங்கிய மயிலைப் போல் மயங்கி விழுந்தனள். முதலைகள் நிறைந்த கடலால் சூழ்ந்த இவ்வுலக மன்னன் மறைந்ததால், பகலும் இரவாகப் போனது.

379. கருடனாயவன் காலிலிகட் கெலாம்
கருடதண்டவன் என்பான் அக்கணத்திலே
மருவி மந்திரம் ஓதவும் மன்னனுக்கு
இருள் பரந்துயிர் ஏகியது ஏகலும்.

காலற்ற ஊரும் தன்மையுடைய பாம்புகளையெல்லாம் கருடனைப்போல் நடுங்கவைக்கும் கருடதண்டனென்னும் மந்திரவாதி ஒருவன் விரைந்து வந்தும் விடம் தீரமந்திரமோதியும் பயனின்றி மன்னன் உடலில் இருள்போல் நஞ்சு பரவி உயிர் பிரிந்தது.

380. மையலுற்றவன் மந்திரம் ஒன்றினால்
நெய்யொழுக்கி நெருப்பை எரித்திடாப்
பையெனப் பண நாகமெலாம் அழைத்து
உய்யவு நுமக்கு ஒன்றுரை செய்கின்றேன்.

அதைக்கண்ட மந்திரவாதி மனம் மயங்கி, மீண்டும் ஒரு மந்திரத்தை ஓதி நெய் சொரிந்து தீயை எரியச் செய்து, படமுடைய பாம்புகள் அனைத்தையும் அவ்விடத்தே வரச்செய்து, நீங்கள் தப்பித்துப்போக ஒருவழி சொல்லுகின்றேன் கேளுங்கள் என்றான். (அனைத்தையும் கொன்றுவிடாமல் குற்றம் செய்த பாம்பினை அறிய வழி வகுத்தான்)

381. குற்றமில்லவர் மற்றிந் நெருப்பினை
உற்ற போழ்து இதுநீரினை ஒத்திடும்
குற்றமில்லவர் போநடு வன்றெனில்
இற்றது உம்முயிர் என்கையிலென்றனன்.

கருடதண்டன் பாம்புகளை நோக்கி நீங்கள் குற்றமற்றவர்களாயின் இந்நெருப்பு நீரைப்போல் குளிர்ச்சியைத்தரும், எனவே நெருப்பிலே நுழைந்து செல்வீர்களாக; யாராவது போகவில்லையெனில் என் கையினால் இறந்துபடுவீர்கள் என்றான்.

382. அஞ்சி மற்றவன் ஆணை இறந்திடா
நஞ்சு தாரிகள் நண்ணின தீயினைப்
புஞ்சு பூம்பொய்கை புக்கன போலவே
உஞ்சு போயின ஒன் றொழியாமையே.

மந்திரவாதியின் ஆணையை மீறுவதற்கு அஞ்சிய நச்சரவங்கள் தீயிலே புகுந்து சென்றன. அவைகள் யாதொரு தீதுமின்றி பூம்பொய்கையில் செல்வதுபோல் மகிழ்ச்சியாகத் தப்பிச்சென்றன.

383. வந்து அகந்தகன் மற்றந் நெருப்பினை
நின்று புக்கிட நீறது வாயது
சென்று காள வனத்தில் அத்தீமையால்
அன்று லோபச் சமரம தாயினான்.

இறுதியில் அரசனைக்கடித்த அகந்தனன் என்னும் நாகமானது தீயிலே நுழைய அக்கணமே எரிந்து சாம்பலாகியது, பாம்புப்பிறவியிலிருந்து நீங்கிய உயிர் காளவனம் என்னும் காட்டிலே 'சமரீ' என்னும் விலங்காகப் பிறந்தது.

384. ஆயுவும் கிளையும் அரசும் எலாம்
மாயம் என்பவன் போலமரித்திடாச்
சீயசேனனும் தீவினை வன்மையால்
ஆயினன் சல்ல கீவனத் தானையே.

நாகம் கடித்து இறந்த சீயசேனன் வாழ்வும், சுற்றமும் அரச இன்பமும் நிலையற்றவை என்று உலகிற்கு அறிவிப்பவன் போல இறந்து தனது தீவினைக் கொடுமையாலே சல்லகீ என்னும் காட்டிலே யானையாகப் பிறந்தனன்.

385. அசனிகோடம் எனும் பெயர் ஆயவன்
கசனி செய்து கடாத்தயல் யானையை
விசனியாப் பிடி சூழ விலங்கல் மேல்
அசனம் இங்குவதாக அமர்ந்தனன்.

அந்த யானைக்கு 'அசனிகோடம்' என்னும் பெயர் அமைந்தது. அது தனது உடல் வன்மையால் மற்ற ஆண்யானைகளை வருத்திப் பல பெண்யானைகள் தன்னைச் சூழ்ந்து வர மலைச்சாரலிலுள்ள சுவைமிக்க மரத்தழைகளை உணவாக உண்டு வாழ்ந்தது.

386. நாவிநாறும் குழல்கள் விரித்திடா
ஆவிபோன கலாவி கிடந்தெனத்
தேவியைத் தெருண்டார் எடுத்துத்துயர்
ஓவும் வண்ணம் உரைத்துடன் ஓம்பினார்.

இங்கே மன்னன் சீயசேனன் இறந்த துயரம் தாளாது, உயிர் நீங்கிய ஆண் மயிலானது தோகையை விரித்துக் கிடந்தது போல் மயங்கிக் கிடந்த இராமதத்தா தேவியைத் தெருட்டி ஆறுதல் அடையச் செய்து ஒருவாறு துயரம் நீங்குமாறு கற்றுத்தெளிந்த ஆன்றோர்கள் நீதிகளை எடுத்துரைத்தார்கள்.

387. தோன்றின நிலையாதுடனே கெடல்
ஈன்ற தாயரும் ஈட்டு வைத்து ஏகலும்
ஆன்றவர் அழிவெய்தலும் வையகம்
தோன்றின் அன்று தொடங்கின அல்லவோ.

தேவியே! இவ்வுலகில் தோன்றியவை தோன்றியவுடனே கெட்டுப்போதலும், ஈன்ற தாயர் தாங்கள் பெற்ற குழவியை விட்டு விட்டு இறந்து போதலும், மிகச்சிறந்த ஆன்றோர்களும் மறைந்து விடுதலும் ஆகிய இவை இவ்வுலகம் தோன்றிய நாளிலிருந்து நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளாகும்.

388. செல்வமும் சிலநாளிடையே கெடும்
அல்லல் என்றும் உறாதவரும் இலை
மல்லை வென்ற புயத்தெழின் மன்னவர்
எல்லையில்லை இம்மண்ணில் இறந்தவர்.

நமது செல்வங்கள் அனைத்தும், சில நாள்களில் அழியக்கூடியவையே. இவ்வுலகில் துன்பமடையாதவர்கள் யாருமில்லை. மற்போரிலே வெற்றிபெறும் அழகிய தோள்களையுடைய மன்னர்கள் எத்தனைபேர் இறந்துபோனார்கள் என்பதற்கு எல்லையுண்டோ.

(வேறு)

389. இறந்தவர்க் கிரங்கி நாமும் அழுது மேல் இன்றுகாறும்
பிறந்த நம் பிறவிதோறும் பெற்ற சுற்றத்தை எண்ணில்
இறந்த நாள் அலகை ஆற்றாது எவருக்கென்று அழுதும் என்னத்
திறம் தெரிந்து உணர்ந்து தேவி சிறிது போய்த் தேறினாளே.

இப்போது இறந்துபோனவர்களுக்காக மனமுடைந்து அழத்தொடங்கினால் இதுவரை நாம் எடுத்த பிறவிகளில் நாம் பெற்று இழந்த சுற்றத்தைக் கணக்கிடலாமோ இவர்களில் யாருக்காக நாம் அழுவது என்று ஆன்றோர்கள் எடுத்துக் கூறக்கேட்ட இராமதத்தாதேவி சில நாள்களில் மனம் தேறி அமைதி அடைந்தாள்.

390. தேறினாள் மைந்தர் தம்மைத் தருகெனச் செப்ப நொந்த
ஏறுபோல் நடந்து வந்தாங்கு இறைஞ்சி நின்ற வரை நோக்கிப்
பேறிலேன் உம்மைச் சூட்டி அரசனைப் பிரிந்தேன் என்ன
ஆறிழி வரையைப் போல அழுதடி தொழுது வீழ்ந்தார்.

அமைதியடையந்த தேவியானவள் தனது மைந்தர்களை அழைத்து வரப்பணித்தனள். அன்னயிடம் வந்த மைந்தர்களும் மனம் நொந்த ஏறுபோல் அருகில் சென்று அன்னையின் அடிகளை வணங்கி நின்றனர். இராமதத்தை மக்களை நோக்கி மைந்தர்களே! உங்களை முடிசூட்டி மன்னர்களாக்கு முன்பே மன்னனை இழந்து விட்டேன் என்று கூறக்கேட்ட மைந்தர் அருவிகள் சொரியும் மலைபோல கண்ணீர் விட்டு அன்னையின் அடிகளில் தொழுது வீழ்ந்தனர்.

391. திருவனாள் அவரைத் தேற்றிச் சீயசந்திரனை நோக்கி
முருகுலாம் மகுடம் சூட்டி மண் முழுதாள்க என்று
பொருவிலாள் அதனிற் பின்னைப் பூரசந்திரனை நோக்கி
அரசிளம் குமரனாய் நீ அமர்ந்தினி திருக்க என்றாள்.

திருமகளைப் போன்ற இணையற்ற இராமதத்தை தனது மக்களை ஆறுதலடையச் செய்து மூத்த மகனாகிய சிம்மசந்திரனை நோக்கி மணம் வீசும் மலர் மாலையுடன் கூடிய மணிமுடியை அணிந்து இவ்வுலகை ஆள்க எனக்கூறி இளையமகன் பூரணச்சந்திரனை இளவரசனாய் இனிதிரு எனக்கூறினாள்.

392. இந்திர விபவம் தன்னை இருவகிர் செய்து மைந்தர்
அந்தரம் பிறிதொன்றின்றி இன்பத்துள் அழுந்து நாளுள்
சிந்துரக் களிற்றுச் சீயசேனன் தன் வார்த்தைக் கேட்டு
வந்தனர் சாந்தி ரண்ணியமதி யென்பார் துறந்த மாதர்.

இந்திரனது இன்பத்திற்கு நிகரான இன்பத்தை மைந்தர்கள் இருவரும் ஏற்றத்தாழ்வின்றி அனுபவித்து வரும் நாளில், செந்நிறப் புள்ளிகளையுடைய யானைப்படைகளின் தலைவனான சீயசேன மன்னனின் மறைவுச் செய்தியைக் கேட்ட சாந்திமதி, இரணியமதி என்னும் இரு பெண் துறவியர் தேவி இராமதத்தையிடம் வந்தனர்.

393. அங்கநூல் பயின்று வல்லார் அறவமிர்து அளிக்கும் சொல்லார்
சிங்கநற் பாய்ச்சலாதி நோன்பொடு செறிந்து நின்றார்
தங்கிய கருணை நெஞ்சில் தரியினார் உயிர்கட் கெல்லாம்
திங்கள் வெண்குடை யினான்தன் தேவியைக் கண்டு சொன்னார்.

அத்துறவியர் இருவரும் அங்காகமங்களை நன்கு பயின்று தெளிந்தார்கள். அறமாகிய அமுதத்தை வழங்கும் சொல்லாற்றல் மிக்கவர்கள் சிங்கப்பாய்ச்சல் என்னும் நோன்பு முதலான பல நோன்புகளை நோற்றவர்கள். உலக உயிர்களிடத்து அருள் நிறைந்த நெஞ்சினர். இத்தகு பண்புகளையுடைய துறவியர், முழுமதி போன்ற வெண்குடையினையுடைய வேந்தன் சீயசேனனின் தேவி இராமதத்தைக் கண்டு கூறலுற்றனர்.

394. அங்கர வல்குலாரில் அருந்ததி அனைய நங்கை
மங்கலம் இழந்த தெம்மனோர்கள் தம் பாவம் வாடிச்
செங்கயலனைய கண்கள் சிதறி நீ அழுதபோழ்தும்
வெங்களி யானை வேந்தன் வெளிப்படான் ஒழிக என்றார்.

பாம்பின் படம் போன்ற அல்குலையும், அருந்ததிக்கு நிகரான கற்பினையுடைய நங்கையே, நீ மங்கலமிழந்தது எங்களைப் போன்றவர்கள் செய்த பாபமே காரணமாகும். நீ வாட்டமுற்று செங்கயல் போன்ற அழகிய கண்கள் நீர் சொரிய அழுதாலும், மிக்க செருக்கினையுடைய யானையின் தலைவனாகிய அரசன் மீண்டும் வரப்போவதில்லை. எனவே வீணே வருந்துதல் வேண்டாம் என்றனர்.

395. ஆர்வத்தின் அரற்றின் சிந்தை ஆர்த்தமாய் அதனிற்பின்னை
வேரத்தையுடையவாய விலங்கிடைப்பிறந்து தீமைப்
பாரத்தை யடைந்து சென்று நரகத்தில் பதைப்பர் கண்டாய்
நேரொத்த மனத்தையாகி அநித்தமே நினைக்க என்றார்.

மன்னன் மீது கொண்ட ஆசை காரணமாக அவனை இழந்துவிட்டோமே! என்ற துன்பத்தில் ஆழ்ந்து அரற்றினால் மேலும் ஆர்த்தத் தன்மை நிலைபெற்று வைரமுண்டாகி விலங்கினத்திலே பிறந்து மீண்டும் மீண்டும் கொடிய பாபச்சுமையைச் சேர்த்து நரகத்திலே வீழ்ந்து துடிக்க நேரும் என்பதை உணர்வாயாக. எனவே இன்ப துன்பங்களைச் சமமாக எண்ணும் மன அமைதியோடு அனைத்தும் நிலையற்றவை என்ற உண்மையை உன்னுவாயாக என உரைத்தனர்.

396. அழுந்தி நீ சோகந் தன்னில் அரிய இப்பிறவியாலாம்
செழும்பயன் இழந்திடாதே திருவறம்செறிந்து சிந்தை
எழுந்தநல் விசோதி தன்னால் இடர்க்கடல் கடந்து பற்றி
அழுந்திய வினையை வெல்லும் அறத்துவித்து அமைக்க என்றார்.

மேலும் அவர்கள் அரசியை நோக்கி நீ துன்பத்துள் மூழ்கி பெறுதற்கரிய இம்மனிதப் பிறவியால் அடைய வேண்டிய உண்மைப் பயனை இழந்துவிடாதே. திருவறத்தினை மேற்கொண்டு உள்ளத்தே உண்டாகும் நன்மை மிக்கத் தூய பரிணாமத்தால், துன்பக் கடலைக் கடந்து ஆசையில் மூழ்கியதால் தோன்றிய வினைகளை வெல்லும் ஆற்றல் மிக்க அறத்தின் வித்தாகிய நோன்பு, விரதம் முதலியவைகளை ஏற்பாயாக என்றும் கூறினார்.

397. துவர்ப்பசை நான்கில் தீய விலச்சை மூன்றாகி நாளை
அவத்தமே போக்கிடாதே அம்மைநும் ஆற்றற் கேற்ற
தவத்தொடு விரதம் சீலம் தக்கன தாங்கிச் சிந்தை
உவர்ப்பொடு வெறுப்பின் ஒன்றி உறுதிக் கண் உழக்க வென்றான்.

மேலும் அவர்கள் சினம், மானம், வஞ்சனை, ஆசை என்னும் நான்கு கொடிய தன்மைகளையும், மூன்று விதத் தீய சிந்தனைகளையும் ஒழிக்காமல் வளர்த்து வாழ்நாளை வீணாக்காமல் உனது ஆற்றலுக்கேற்ப தவம், விரதம் மற்றும் தகுதியான ஒழுக்கங்களையும் மேற்கொண்டு நிலையற்ற இந்தப் பொருள்களின் நிலையாமையையும் தாழ்நிலையையும் உணர்ந்து இவற்றினை வெறுத்து உறுதியான உயர் அறத்தில் மனம் பொருந்தி மகிழ்ச்சியுடன் இருப்பாயாக என்றனர்.

398. அருந்தவத்தார்கள் சொல்லைக் கேட்டனாலும் இராமை சித்தம்
விரும்பிய தவத்தளாகி வேந்தனும் மகனைக் கூவிப்
பொருந்திய செல்வம் சுற்றம் புற்புதம்போல மாயும்
திருந்திய குணத்தினாய் நீ திருவறம் மறவல் என்றாள்.

அரிய தவத்தினை மேற்கொண்ட அத்துறவியர் கூறியவற்றைக்கேட்ட இராமதத்தை தவத்தை மேற்கொள்ள விரும்பிய மனத்தினளாய் அரச பொறுப்பிலுள்ள தனது மகன் சிம்மச்சந்திரனை அழைத்து பண்பட்ட குணமுடைய மைந்தனே! நாம் அனுபவித்துவரும் இந்த அரச பதவி முதலிய அனைத்துச் செல்வங்களும், சுற்றத்தவர்களும் நீர்க் குமிழியைப் போல் மாயக் கூடியவை. எனவே திருவறத்தை எப்போதும் மறவாமல் இரு என்றாள்.

399. என்றலும் அஞ்சி நெஞ்சத்து இளம் சிங்கம் நடப்பதே போல்
சென்றவன் பணிந்தெழுந்து செப்பிய தென் கொல் என்ன
மின்றிகழ் பூணினாய் மேல் விழுத்தவம் தொடங்கி நோற்றற்கு
ஒன்றிய துள்ளம் என்ன உருமுற்ற நாகம் ஒத்தான்.

என்று தனது தாய் கூறியதைக் கேட்ட அரசன் தன்னைத் துறக்கப் போகின்றாள் என நடுங்கி இளஞ்சிங்கம் நடப்பதைப் போல் நடந்து அன்னையின் அருகில் சென்று அடிகளில் வீழ்ந்து பணிந்தெழுந்து தாயே! தாங்கள் என்ன சொல்கின்றீர்கள் என்று கேட்க, மின்னலைப் போல் ஒளிமிக்க அணிகளை அணிந்த மைந்தனே இதற்கு மேல் தூய தவத்தை மேற்கொண்டு நோற்பதற்கு எனது மனம் ஒருப்பட்டுள்ளது எனக் கூறவும், அதைக் கேட்ட மைந்தன் இடியோசை கேட்ட நாகத்தைப் போல் கலங்கி வீழ்ந்தான்.

400. கடகமும் முடியும் சிந்தக் கற்பகம் போல வீழ்ந்து
படிமிசைக் கிடந்த வீரன் பரிசனம் தேற்றத் தேறி
அடியனேன் பிழைத்தது என் கொல் அடிகள் நீர்துறத்தற் கென்ன
நெடிது நீர் உரையல் நீங்கள் பிழைத்தது ஒன்றில்லை என்றாள்.

அவன் அணிந்திருந்த முடியும் கடகமும் இடறிப் போகக் கற்பகமரம் சாய்வதைப் போல் கீழே வீழ்ந்த மன்னனை மற்றவர்கள் தேற்ற ஒருவாறு தேறி அன்னையே! நீங்கள் துறந்து செல்லுமாறு அடியவனாகிய நான் செய்த பிழையாது என்றலும் நீங்கள் செய்தது தவறு ஒன்றுமில்லை வீணாக வருந்தி எதையும் கூறாதீர்கள் என்றான்.

401. மறம் புரிந்து இலங்கும் வைவேல் மன்னவன் தேவி உள்ளம்
திறம் புரிந்து எழுந்த வண்ணம் அறிந்தபின் சீயசந்தன்
துறம் புரிந்து அடிகள் என்று தொழுது உடன் படலும் நீல
நிறம் புரிந்து எழுந்த ஐம்பால் நெறிமையின் நீக்கினாரே.

வீரச்செயல் புரிந்து விளங்கும் கூர்மை மிக்க வேலினையுடைய சீயசேன மன்னனின் தேவி இராமதத்தையின் உள்ளம் தவத்திலே உறுதியானதை உணர்ந்த சிம்மச் சந்திரன் அடிகளே! நீங்கள் விரும்பிய வண்ணமே துறவினை மேற்கொள்வீராக என்று தொழுது

உடன்படலும், தேவியினது நீலநிறம் பொருந்திய அடர்ந்த ஐம்பால் கூந்தலை முறைப்படி களையலுற்றனர்.

402. அனிச்சத்தம் போது கொய்வார் போல் அணி மயிரை வாங்கிப்
பனிச்செப்பை அனைய கொங்கைப் பால் நிறப்படத்தின் வீக்கிப்
தனிச்சித்தம் வைத்த நங்கை தாமரைப் பூவில் அன்னம்
பனிச்சுத்தன் சூட்டு வீழ இருந்ததோர் படியிருந் தாள்.

மும்மணிகளாகிய ஆன்ம சிந்தனையில் அசைக்க முடியாத உறுதியுடைய தேவியினது கூந்தலை அழகிய அனிச்சமலரைக் கொய்வது போல் கொய்து நீக்கி, குளிர்ந்த மணிச் செப்பனைய கொங்கைகளைப் பால் போன்ற வெண்ணிறத் துணியினால் இறுக்கிக் கட்டி உச்சிக்கொண்டை உதிர்த்து வீழ்ந்த அன்னப்பறவை தாமரைமலரிலே தங்கியிருந்தது போல் தவத்திலே தங்கினாள்.

403. அரசிளங்குமரன் பைம்பொன் அளவின்றி ஈந்து பின்னைப்
பிரசநின்றறாத பிண்டிப் பிரான் திருச் சிறப்பியற்றி
மரையிருந்தவளைப் போலு மிராமைதன் துறவைக் கண்டு
விரைமலர் சொரிந்து வாழ்த்தி மீண்டுதன் நகரம் புக்கான்

இளவரசனானப் பூரணச்சந்திரன், தாமரைமலரில் இருக்கும் திருமகளுக்கு நிகரான இராமதத்தாதேவியின் துறவினைக் கண்டு அவரது அடிகளில் மணம்மிக்க மலர்களைத் தூவித் தொழுது வாழ்த்தி வறியவர்க்கு வாரி வழங்கி தேன் நிறைந்த அசோக மரத்தினைப் பொருந்திய அருக பெருமானுக்குரிய சிறப்பினைச் செய்து தனது நகரமடைந்தனன்.

404. மத்தமால் களிறு வான்கை யிழந்தது போன்று இராம
தத்தையைப் பிரிந்து சீயசந்திரன் சாலவாடி
முத்தணி முலையினார் தம் முறுவலும் சிறிய நோக்கும்
பித்தன் வாய்ப் பட்ட நல்ல பிரசம் போல் திரிந்த வன்றே.

மதம் மிக்க பெரிய யானை தனது ஒப்பற்ற துதிக்கையை இழந்தது போன்று இராமதத்தையின் பிரிவை ஆற்றாது சிம்மச்சந்திரன் மிகவும் வாட்டமுற்று முத்துமாலைகளை அணிந்த முலைகளையுடைய மனைவிமார்களின் புன்முறுவலும், கடைக் கண் நோக்கும் பித்துப் பிடித்தவன் வாயிலே பெய்த தேனைப் போல் வேறுபட்டு வெறுப் பெய்தினான்.

405. ஈன்றதாய் என்பதன்றி இறந்த நாட் சிறந்த அன்பின்
தோன்றினான் ஆதலானும் பிரிவின்மா துயர முற்றான்
ஆன்றவர்க்காய நன்றி அணுவும் மாமேருவாகித்
தோன்றும் ஏழ்பிறவிதோறும் தொடர்ந்து வீடெய்து காறும்.

இராமதத்தைத் தன்னை ஈன்றெடுத்த தாய் எனபதன்றி சென்ற பிறவியிலும் அவளிடத்து அளவுகடந்த அன்புடையனாதலின் அவளது பிரிவு சிம்மச்சந்திரனுக்குப் பெருந்துயரத்தைத் தந்தது, நல்லோரிடம் தோன்றும் நன்றியுணர்வானது மேருமலைபோல் பெருகி ஏழு பிறவிகளுக்குத் தொடர்ந்து தோன்றி வீடுபேறடையும் வரையில் பயன் தரும்.

406. பகைவர் தம் நண்பு போலப் பைந்தொடிப் பவழ வாயர்
முகைமுலை கண்ணும் தோளும் முறுவலும் செறிய வந்த
உவகையினோடு நாளில் உறுதவன் ஒருவன் வந்தான்
புகரிலா நெறிவிளக்கும் பூரசந்திரன் என்பானே.

சிம்மச்சந்திரன் தனது தாயினது பிரிவிற் குப்பின், பசுமையான வளையல்களை யணிந்த பவழம் போன்ற வாயினையும் தாமரை மொட்டினைப் போன்ற முலைகளையும், அழகிய கண்களையும் புன்முறுவலையுமுடைய மகளிரின் இன்பத்தில் பங்கேற்றாலும் ஆர்வமற்ற அவனது மகிழ்ச்சியானது பகைவர்களின் போலி நட்பினைப் போல் இருந்தது.

இந்நிலையில் குற்றமற்ற உயர் நெறியினை விளக்கும் தகுதி பெற்ற பூரணச் சந்திரர் என்னும் முனிவர் அங்கே வந்தார்.

407. வந்த மாதவன் தன் செந்தாமரையடி வணங்கிப் பூத்தூய்
அந்தமில் உவகையெய்தி அம்பொன்மங்கலங்கள் ஏந்தி
இந்துவாள் நுதலினாரோடு எதிர் கொண்டு பணிந்து புக்குச்
சுந்தரத் தலத்தின் ஏற்றித் துகளடித்துகிலின் நீக்கி

முனிவரது வருகையறிந்த சிம்மச்சந்திரன் பிறைமதி போன்ற ஒளிமிக்க நெற்றியினையுடைய மகளிருடன் முனிவரின் தாமரைமலர் போன்ற அடிகளை வணங்கி மலர்களைத் தூவி, எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தவனாய் அழகுமிக்க அட்ட மங்கலங்களையேந்தி எதிர்கொண்டு மீண்டும் வணங்கி அரண்மனைக்கு அழைத்துச் சென்று அழகிய இருக்கையில் இருக்கச் செய்து தனது மெல்லிய மேலாடையினாலே முனிவரின் பாதங்களில் படிந்திருந்த தூசினைத் துடைத்தான்.

408. மணிமலர்க் கலச நீரால் மாசறக் கழுவி வாசம்
தணிவிலா மாலை சாந்தம் சருவினால் அருச் சித்து ஆற்றி
இணையிலா முனிவன் பாதம் பணிந்து நால் அமிர்த மீந்து ஆங்கு
அணியினால் பணியும் போழ்தில் அமரரும் சிறப்பு செய்தார்.

மலர்ச் சூடிய மங்கலக்கலச நீரால் மாசு நீங்கும்படி தூய்மை செய்து நறுமண மலர் மாலைகள், சந்தனம், சரு முதலியவற்றால் அர்ச்சித்துப் பூசையை முடித்து இணையற்ற முனிவரது பாதங்களைப் பணிந்து நால்வகை உணவினை அளித்து வணங்கிநின்ற போது விண்ணவர் மலர், பொன்மாரி பொழிந்து சிறப்புச் செய்தனர்.

409. வந்து அவண் நியமம் முற்றி இருந்தமாதவனை வாழ்த்தி
அந்தமும் பிறவிக்குண்டோ இல்லையோ அருளுக என்ன
அந்தமுண்டாகும் பான்மை அணியவர்க்கு அருந்தவத்தான்
மைந்த மற்று அவையிலார்க்கு மாற்றிடைச் சுழற்சி என்றான்.

மாமுனிவர் ஆகாரத்திற்குப் பிறகு முடிக்க வேண்டிய நியமங்களை முடித்துக்கொண்டு இருந்தபோது மன்னன் மீண்டும் வணங்கி எனது பிறவிப்பிணிக்கு முடிவு உண்டோ, இல்லையோ, அருள் செய்ய வேண்டுமென வேண்ட, மன்னனே! பான்மை என்னும் அழகினையுடைய தூய உயிர்களுக்கு அரிய தபம் காரணமாகப் பிறவிக்கு முடிவு கிடைக்கும், பான்மையும் தவமும் இல்லார்க்கு முடிவற்ற பிறவிச் சுழல் தவிர்க்க முடியாததாகும் என்றார்.

410. பான்மையின் பரிசு என்என்னிற் பழுத்தலுக் காற்றல் பிந்தி
ஈனமாய்ப் பெருகிவந்த இலையிடைக்கனியும் இவ்வாறு
ஊனம் ஒன்றிலாத பான்மை உயிரிடைக்கனியும் வீட்டைத்
தானம் பன்னிரண்டின் மெய்ம்மைத் தவத்திலையடுத்த போழ்தே.

குலையிலே உள்ள சிறிய பிஞ்சுகள் முற்றிக் காயாகி நாள்கடந்து கனியாக மாறும் தன்மையுடையதாயினும் முற்றிய குலையை அறுத்து இலைகளைப் போட்டு மூடிவைத்தால் விரைவில் கனியும்; அது போல், பான்மையுடைய உயிர்கள் இயல்பிலேயே துறந்து பயன் எய்தும் ஆற்றலுடையதாயினும் குற்றமற்ற பான்மை உயிர்கள் பிறருடைய தூண்டுதல் காரணமாக விரைந்து துறவு பூண்டு முறையான பன்னிரு தவங்களைத் தாங்கி கனிந்து வீடெய்தும்.

411. மெய்த்தவத்தன்மை தானும் வென்றவர் படிமம் தாங்கிச்
சித்தம் மெய் மொழிகளில் மூன்றில் இருந் தொடர்ப் பாட்டின் நீங்கிப்
பத்தறம் பன்னிரண்டாம் தவத்தொடு பயின்று தன்கண்
உத்தமக்காட்சி ஞான ஒழுக்கத்தையழுத்தல் கண்டாய்.

உண்மையான உயர் தவத்தின் இயல்பானது, வினைகளை வென்றுயர்ந்த இறைவனைப் போல் நிர்வாண உருவத்தை எய்தி, மனம், மொழி, செயல்களால் தூய்மையாகி அகப்புறப் பற்றுக்களை அடியோடு நீக்கி, பத்து அறங்களையும், பன்னிரு அறங்களையும் ஏற்றுப் பயின்று, மிக உயர்ந்த காட்சி, அறிவு, ஒழுக்கங்களைத் தன்னிடத்தே தாழ்வின்றி தரித்து அதிலே நிலைத்திருத்தலாகும் என்பதை அறிவாயாக.

412. தான் எனப்படுவது எட்டு வினை விட்ட தன்மை தன்கண்
ஊனமில் அனந்த நான்மை இருமையும் ஒருமை யாக்கி
யான் எனதென்ன நீங்கும் வினையன்றி யாக்கை சுற்றம்
யான் எனது என்ன நீங்காது எண் வினைத் தொடரும் என்றான்.

எட்டுவகை வினைகளை ஒழித்து முடிவற்ற ஞானம் முதலிய நான்கு வகைகுணங்களை எய்தி தூய உயிரும், அதன் இயல்பான குணங்களாகிய கடையிலா அறிவு முதலியவற்றைப் பிரிக்க முடியாதவாறு இணைத்து நான் என்பது உயிர்தான், கடையிலா ஞானம் முதலிய குணங்கள் தான் என்னுடையவை என்று உறுதியாக உணரும் போதுதான் எட்டு கர்மங்களும் நீங்கும்; இதைவிடுத்து நான் என்பது இந்த உடல் தான், சுற்றம் செல்வம் முதலியவைதான் என்னுடையவை என்ற சிந்தனை இருக்கும்வரை உயிரை விட்டு அகலாமல் எட்டுவினைகளும் தொடரும், என்றான்.

413. என்றலும் எனதும் யானும் இவை என மயங்கிக் கீழ்நாள்
இன்றுயான் கதிகள் நான்கில் சுழன்றனன் நெறியறிந்த
இன்றுநான் இவற்றின் நீங்காது ஒழிவனேல் என்கண் நீங்காது
ஒன்றினால் ஒன்று நில்லாது ஒழிக இத்தொடர்ச்சி என்றான்.

என்று முனிவர் அருளியதைக் கேட்ட அரசன் இந்த உடலை நான் என்றும் சுற்றம் மற்றும் செல்வங்களை என்னுடையவை என்றும் தவறாக மயங்கிக் கிடந்த நான் இறந்த காலத்தில் நான்கு கதிகளிலும் உழன்றுகிடந்தேன். இன்று உண்மையை உணர்ந்தேன். இனியும் இவற்றை நீக்கிச் செல்லாது நிற்பின் வினைகள் என்னை விட்டு நீங்கமாட்டா. எனவே உயிரினது இயல்பினை உணர்ந்து அதன் தன்மையில் பொருந்தினால், வினைகள் எதுவும் நிற்காது. எனவே இவை என்னை விட்டு ஒழிக, அதற்கான நிலையை மேற்கொள்வேன் என மனத்தே எண்ணினான்.

414. நெருப்பிடைக் கிடந்த செம்பில் பட்ட நீர்த்துள்ளி போலும்
விருப்பிடைக்கிடந்த உள்ளத்து எழுந்த வேகத்தின் இன்பம்
திருத்தியைச் செய்யும் என்று புலத்தினைச் செறிய நிற்றல்
நெருப்பை நெய்தெளித்து அவிப்பான் எழுந்தவன் நினைப்பின் ஒன்றே.

நெருப்பில் பழுக்கக்காய்ந்த செப்புத்துண்டில் தெளித்த நீர்த்துளிகளைப் போல், ஆசையாகிய நெருப்பிலே ஆழ்ந்த உள்ளத்தின் கிளர்ச்சியால் உண்டான இன்பம் நிறைவை உண்டாக்குமென்று அறிவானது அதன் வழியிலே செல்லுமாயின் அது நெய்யை ஊற்றி நெருப்பைத் தணிக்கச் செய்ய எண்ணியவனின் நிலைக்குச் சமமாகும்.

415. பூமி அந்தரத்து வந்து பொருந்திய புலத்தின் ஆசை
ஓவிலாது துய்த்தும் வேறோர் சுவையின்மை உணர்ந்து மீட்டும்
மேவுதற்கு எழுதல் மென்று விட்டதை மென்றல் அன்றிக்
கூவல் மண்டுகம் போலும் குணத்தமே நினைக்கின் என்றான்.

மேலும் இம்மண்ணுலகத்திலும், விண்ணுலகத்திலும் எடுத்த எண்ணற்ற பிறவிகளிலும் பொருந்திய புலன்களின் ஆசைக்கேற்ப இடைவிடாது இன்பத்தைத் துய்த்துப் பார்த்துப் புதியதோர் சுவை இல்லை என்பதை நன்குணர்ந்தும் மீண்டும் அதே சுவையைத் துய்ப்பதற்குத் துணிவது ஒருதடவை வாயிலிட்டுமென்று சுவைத்துத் துப்பியதை மீண்டும் வாயிலிட்டுச் சுவைப்பதற்குச் சமமாகும். இதையெல்லாம் சற்றுச் சிந்திப் போமாயின், நாம்

எதையும் உணராத கிணற்றுத் தவளைக்குச் சமமாக இருக்கின்றோமே என்றும் எண்ணினான்.

416. பெறற் கரும் பிறவி காட்சி பெருந்தவம் திருந்து மாற்றம்
சிறப்புடை குலம் நல் யாக்கை செறிவித்த செழுந்தவத்தை
மறப்பனேல் மாற்றையாக்கும் இவையும் வந்தணுகா வென்று
திறந்துளி தெரிந்து திங்கள் நாமற்குத் தெரியச் சொன்னான்.

பெறுதற்கரிய இம்மனிதப் பிறப்பினையும் உயர்ந்த நற்காட்சியினையும், உயர் தவத்தினையும் நல்ல சொல்லாட்சியையும், சிறப்பு மிக்க குலத்தினையும் அழகிய உடலையும் அளிக்கின்ற பயன்மிக்க தவத்தை ஏற்காது மறப்பேனாகில் பல பயனற்ற பிறப்புகள் தொடரும், மேலே கூறியவைகளும் சேர மாட்டா என்று வீட்டின் பெருமையையும் மாற்றின் தன்மையையும் நன்கு சிந்தித்துணர்ந்த சிம்மச்சந்திரன் தனது தம்பியாகிய பூரணச்சந்திரனை நோக்கி அவன் அறியும் வண்ணம் கூறத் தொடங்கினான்.

417. முன்னம் செய்தவத்தின் வந்து முடிந்தநற் பயத்தைக் கண்டால்
பின்னும் அத்தவத்தைச் செய்து பெரும் பயன் நுகர்ந்திடாதே
மின்னஞ்சு நுசுப்பினார் தம் வேட்கையின் வீழ்ந்து போகும்
வன்னெஞ்சற் கில்லை கண்டாய் மாற்றிடைச் சுகமும் என்றான்.

முற்பிறப்பில் செய்த தவப் பயனால் இப்பிறப்பில் எய்தியிருக்கும் பயன்மிக்க புண்ணிய பலன்களைப் பற்றிச் சிந்திப் போமாயின் மேலும் மேலும் தவத்தினை மேற்கொண்டு மிக உயர்ந்த பயன்களை அடையாமல் மின்னலைக் காட்டிலும் மெல்லிய இடையினையுடைய மகளிரின் இன்பத்தில் ஆழ்ந்துகிடக்கும் ஆசைமிக்க மனமுடையவனுக்குத் தொடரும் பிறவியில் நல்ல சுகமும் கிடைப்பதில்லை என்றான்.

418. அருந்தவம் தானம் சீலம் அறிவன் நற்சிறப்பு இவற்றால்
திருந்திய மனத்தினாரைத் திரு என்றும் பிரிதல் செல்லாள்
பொருந்தியே நிற்கும் பூமி புகழொடும் கீர்த்தி போகிப்
பரந்தென்றும் அவர்கண் நீங்கா பகைவரும் பணிவர் கண்டாய்.

மேலும் அரியதவம், உயர் ஒழுக்கம், இறைவனுக்குக் கொடுக்கும் சிறப்பு முதலியவற்றால் பண்பட்ட மனமுடைய மேலோர்களைத் திருமகள் பிரியமாட்டாள். அவர்களுடன் இணைந்தே நிற்பாள். அத்தகைய நற்சிந்தனையாளர்களின் புகழும் பெருமையும் பரவி நிற்கும். அரசும் நிலைபெற்று நீங்காதிருக்கும் பகைவர்களும் பணிந்து வணங்குவார்கள். இதை அறிந்துகொள் என்றான்.

419. வேட்கையும் வெகுளிதானும் வெஞ்சொலும் அஞ் சொலார் மேல்
தாட்சியும் முதல மன்னர் திருவினைத்தவறு செய்யும்
சூட்சியும் பெருமைதானும் முயற்சியும் அமைச்சும் ஆதி
மாட்சியைச் செய்து மன்னர் செல்வத்தை வளர்க்கும் என்றான்.

அடுத்து பேராசையும், மாறாச்சினமும் கடுஞ்சொல் மொழிதலும், இனிய மொழிகளைப் பேசும் மகளிரிடம் மயங்கி அடங்கிக் கிடத்தலும் ஆகிய இத்தகு பண்புடைய மன்னர்களின் செல்வம் அழிந்துவிடும். எனவே மேற்கூறிய வற்றிலிருந்து விலகி நிற்கும் உள்ளத்திறனும் பெருமைமிக்க பண்புகளும், அயரா முயற்சியும் நல்லமைச்சர்தம் வழி நடக்கும் தன்மையும் முதலியவை மாண்பினை வளர்த்து மன்னர்களின் செல்வத்தை வளரச் செய்யும் என்றான்.

420. இனையன பலவும் சொல்லி எழின்முடி தம்பிக்கு ஈந்து
கனைகழல் அரசர் சூழக்காவலன் போகி அந்த
முனிவரன் சரணம்மூழ்கி முடிமுதல் துறந்து நின்றான்
சினைமிசை அணியை நீத்த செறிந்தகற் பகத்தை ஒத்தான்.

சிம்மச்சந்திர வேந்தன் இத்தகு உறுதிகளைத் தம்பிக்குக் கூறி அரசபதவியை அளித்து அவனுக்கு முடிசூட்டிய பிறகு பல மன்னர்களுடன் சென்று முனிவர் பூரணச்சந்திரர் பாதங்களை வணங்கி துறவினை மேற்கொண்டு தனது ஆடை அணிகளை முறைப்படி களைந்து தலைமுடியையும் நீக்கி முழுத்துறவினை மேற்கொண்டு நிர்வாணமாக நின்றனன். அப்போது தனது அணிகள் அனைத்தையும் நீக்கி நின்ற அடர்ந்த கற்பக மரத்திற்கு நிகராக விளங்கினான்.

421. பணமிசை மணி தோல் நஞ்சு பரிந்ததோர் பணியைப் போல
பணிமுடி ஆடைகுஞ்சி மனத்திடை மாசு நீக்கிக்
குணமணி இலக்கம் எண்பத்தீரிரண்டணிந்து கோமான்
பணிவினாம் சீலமாலை பதினெண்ணாயிரம் தரித்தான்.

தனது படத்திலுள்ள மணி உடலை மூடி இருக்கும் தோல், பற்களில் நிறைந்த நஞ்சு இவைகளை நீக்கிய பாம்பினைப் போல முடி முதலிய அணிகளையும், தலைமயிரினையும் மனத்தகத்து நின்ற பற்றுக்களையும் அடியோடு நீக்கிப்பல்வேறு விரதங்களாகிய மணிகளை அணிந்து இறைவனது வழிபாட்டினால் அடையக்கூடிய பதினெண்ணாயிரம் உயர் ஒழுக்கங்களையும் தரித்தான்.

422. தயாவெனும் தையலாளைச் சாலவும் செறிந்து தன்கண்
உசாவெனும் உறுதித் தோழன் உடன் புணர்ந்து உறக்கம் என்னும்
மயால் செய்யும் மடந்தை தன்னை மனத்தகத் தகற்றி மாண்பின்
அயாவுயிர்த்திருக்கை வைத்தான் அருந்தவக் கொடியை அண்ணல்.

மேலோனாகிய சிம்மசந்திர முனிவன் அனைத்து உயிர்கள் மாட்டும் கொள்ளும் அருள் என்னும் அழகிய பெண்ணைத் தன்னைவிட்டு நீங்காது ஏற்று அறத்தை ஆய்ந்துணரும் உசா என்னும் உயர் தோழனையும் உடன் சேர்த்துக் கொண்டு தூக்கம் என்னும் மயக்கத்தைச் செய்யும் மங்கையை மனத்தாலும் நினையாது நீக்கித்தானே அறிந்துணர்தல் என்னும் மாட்சியில் இளைப்பாறி தாங்கற்கரிய தவம் என்னும் உத்தமப் பெண்ணைத் தன்னிடத்தே நிலையாக இருக்கச் செய்தான்.

(வேறு)

423. வினைகளுக்கு உதிர்ச்சி வேட்கை நீக்கி மெய் வசம் வரல்
புனைவரும் பொறிச் செறிப்பு உயிர்க்கழிவு போற்றுதல்
நினைவின தொருக்கமும் நெறிவிளக்கமும் செயும்
அனசன தவத்தினோடு அருந்தவன் பொருந்தினான்.

மேலும் சில கர்மங்கள் கழியும் பொருட்டு ஆசையை நீக்கி உடலானது உயிர்ப் பயிற்சியாகி நற்காட்சி நல்லறிவு இவற்றில் நிலைத்திருக்கும் வண்ணம் சேர்ந்துள்ள ஐம் பொறிகளின் அடக்கத்தையும், அனைத்துயிர்களின் துயரத்தைப் போக்கி அவற்றை ஓம்பும் பிராணிசம்யமத்தையும் இடையறா தியானம், வீட்டு நெறி விளக்கம் இவற்றை அடைதற் கேதுவாக உண்ணா நோன்புடனிருத்தல் என்னும் முதல் புறத்தவத்தையும் அந்த அருந்தவ முனிவர் மேற்கொண்டார்.

424. புகாமிகிற் பொறிமிகும் அனசனம் பொருந்திடின்
நெகாவுடம்பு உடன் படாது நாட்கள் நீதி மாதவன்
புகாவினைச் சுருக்க மெய் உடன் படும் பொறிகளும்
மிகாவென விரும்பி 'ஆவமோதிரியம்' மேவினான்.

உணவு மிகுமானால் ஐம்பொறிகளின் ஆற்றல்மிகும், அடியோடு உணவை ஒழித்து விட்டால், இவ்வுடலானது தளர்ச்சியடைந்து தியானம் முதலிய உயிர்ப் பயிற்சிக்கு உடன்படாது என்று உணர்ந்த பெருந்தவத்தினை மேற்கொண்ட சிம்மசந்திர முனிவரானவர் நூன்முறைப்படி நாள்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக உணவினைக் குறைத்து நாள் கணக்கில் மாதக் கணக்கில் உண்ணா நிலையில் பயின்றுப் பழகினால், உடலும் உடன்

படும் ஐம் பொறிகளின் ஆற்றலும் அடங்கும் என்ற விருப்பத்துடன் ஓரளவு உணவை ஏற்றல் என்னும் (ஆவமோதிரியம்) இரண்டாவது புறத்தவத்தினை மேற்கொண்டார்.

425. இருத்தல் போதல் நிற்றல் மண்ணிடைக் கிடத்தலில் உயிர்
வருத்தம் எய்திடாமை ஓம்பும் காயகுத்தி மாதவன்
திரப்பிதம் செல் தேசகால பாவம் எல்லை செய்து உணும்
விருத்தி சங்கமம் எனும் விழுத்தவம் பொருந்தினான்.

இருத்தல், நடத்தல், நிற்றல், மண்ணில் படுத்தல் ஆகிய இச்செயல்களால் உயிர்களுக்கு எவ்வித வருத்தமும் நேராவண்ணம் ஓம்பிப் போற்றும் காயகுத்தி என்னும் முறையில் தவறாமல் இன்று எந்தெந்த உணவினை ஏற்பது அதற்காகச் செல்லும் இடத்தின் அளவு, எவ்வளவு காலம் (நேரம்) உணவின் அளவு இவற்றை எல்லாம் முறைப்படுத்தி அதன்படி உணவு பெறுகின்ற 'விருத்திசங்கமம்' என்னும் மூன்றாவது புறத்தவத்தினைப் பொருந்தினார்.

426. நவைக் கெலாம் இடம் இதுஎன்று நா அதன் புலத்தினில்
சுவைக்கண் மேவல் விட்டு அறத்துறந்து நின்று எவற்றினும்
உவத்தல் காய்தல் இன்றி ஒத்து நின்ற சித்தமெய்த்தவன்
சுவைப்பரித்தியாகமாகும் மாதவத்தொடு ஒன்றினான்.

எவற்றின் மீதும் விருப்போ வெறுப்போ இல்லாது சமநிலையில் நின்று அமைதியான உள்ளத்தில் உண்மையான தவத்தினை ஏற்றுள்ள சிம்மசந்திர முனிவர், நாவினால் உணரும் சுவைதான் துன்பங்களுக்கெல்லாம் காரணமாக அமையும் என்பதை உணர்ந்து நாவில் சுவையில் மனதைச் செலுத்தாது அடியோடு நீக்கி அதிலிருந்து மாறாது நின்று 'ரசப் பரித்தியாகம்' என்னும் புறத்தவத்தினை மேற்கொண்டார்.

427. கவந்தம் ஓரி கூகைபேய் நிவந்தகாடு பாழகம்
உவந்து யானை வாளரி உழுவை நின்றுழல் வனம்
குவிந்தரவு வெம்புலி குமிறுமால் வரைமுழை
உவந்து ராசசீயமொன்று போல வேறு உறைந்தனன்.

அடுத்து தலையற்ற உடல்களும், குள்ளநரிகளும், கோட்டான்களும், பேய்களும் நிறைந்துள்ள சுடுகாட்டிலும் பாழடைந்த வீடுகளிலும் மகிழ்ச்சியுடன் தங்கியிருந்தும், யானை, சிங்கம், புலி போன்ற கொடிய விலங்குகள் வசிக்கும் வனத்திலும், சீறும் பாம்புகளும் உறுமும் புலிகளும் இருக்கும் பெரிய மலைக்குகைகளிலும் மகிழ்ச்சியுடன் இருந்தும் ஓர் ஒப்பற்ற அரசசிங்கத்தைப் போல் அந்தச் சிம்மச்சந்திர முனிவர் தங்கியிருந்து, 'விவித்த சையாசனம்' என்னும் ஐந்தாவது புறத்தவத்தினையும் பொருந்தினார்.

428. வேனல் வெம்புகான் மலை வெயின் நிலையின் மேவியும்
வானம் மாரி சோருநாள் மரம்முதல் மருவியும்
ஊன் உருக்கும் வன்பனிக் கடற்புறத்து வெள்ளிடைக்
கான யானை போல மூன்று காலயோகு தாங்கினான்.

காட்டிலே வசிக்கும் யானையைப் போன்ற அம்முனிவர் கொளுத்தும் வெயில் மிக்க கோடைகாலத்தில் மலை உச்சியில் நின்றும், விண்ணிலே நீர்முகில்கள் நிறைந்து மழை கொட்டுகின்ற கார்காலத்தில் மரங்களின் அடியில் நின்றும், உடலை உருக்கும் கொடிய பனிக்காலத்தில் கடற்கரையின் வெட்ட வெளியில் நின்றும் தளராது மூன்று பருவங்களிலும் நிலைத்தவமாகிய 'காயக்கிலேசம்' என்னும் ஆறாவது புறத்தவத்தினையும் பொருந்தி நின்றான்.

429. அரியவாய் உலகெலாம் விலைமிலா அருங்கலத்
திரயம் மெய்யணிந்தவர் செய்கை சொல் மனங்களால்
மரிய மாசினைக் கெடுக்கும் அத்திவாரமாகிய
பெரியவர் மனங்கொளப் பெருந்தவம் பொருந்தினான்.

பெறுதற்கரியதம் மூன்று உலகங்களை விலையாகத்தரினும் ஈடாகாததுமாகிய மும்மணிகளை மெய்யில் அணிந்தவர்கள் தமது செயலால், சொல்லால், சிந்தனையால் எப்படியோ தவறிழைத்து அதனால் மாசு பெறுவார்களாயின் அம்மாசினைப் போக்கப் பெரிய ஞானிகளால் வகுக்கப்பட்ட ஈடுபடுதல் என்னும் பிராயச் சித்தமாகிய அகத்தவத்தினைச் சிம்மசந்திர முனிவர் மேற்கொண்டார்.

430. பெறற்கரிய காட்சி மெய்யுணர்ச்சி நல்லொழுக் கின்மேல்
இறப்பெய்தாமை மெய்ம்மொழி மனத்துழந்து இறைஞ்சுதல்
சிறப்புடை அறத்தவர்க் கெதிர் எழுச்சி ஆதிஇத்
திறத்த நால் விநயமும் சிறந்து மாதவம் செய்தான்.

அரிதிற் பெறுதற்கரிய நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்னும் மும்மணிகளை விடாது ஏற்றும் மனம் மொழி மெய்யால் பொருந்தி வணங்குதலுமாகிய தரிசன ஞான ஒழுக்க விநயங்கயையும் பெற்று அவ்வாறு பெற்ற சிறப்புடையோரை எதிர்கொண்டு வணங்குதலும் ஆகிய இத்தகு நான்குவகைப் பணிவுகளும் சிறந்து தன்னிடத்தே வளரும் மிகப்பெரிய விநயதவத்தினையும் இயற்றலுற்றான்.

431. பெருத்த நோன்பு வன்பிணிகள் பீடைமூ வியோகமாம்
திருத்தம் மேவினார்கள் தியான நல்வதத் தொடு ஒன்றினார்
விருத்தர் வாலர் மெல்லியர் அறத்தை மேவி நின்றவர்
வருத்தம் நீக்கி ஓம்பும் வையாவச்சமும் மருவினான்.

அடுத்து, நல்லுணர்வைப் பெற நோன்பு மேற்கொண்டவர்களும், முக்கால யோகத்துடன் நிலைத்த தவத்தினை ஏற்றவர்களும், தருமத்தியானத்துடன் பலவகை விரதங்களை மேற்கொண்டவர்களும், முதியோர்களும், மிக்க இளையவர்களும், நலிந்தவர்களும் நல்லுணர்வோடு கூடிய அறத்தினை மேற்கொண்டவர்களும், ஆகிய இவர்கள் முன்வினைக் காரணமாக கொடிய நோய் போன்ற துன்பங்களால் பீடிக்கப்பட்டால் அவர்தம் துன்பத்தைப் போக்குவதும், அதே நேரத்தில் தமது ஒழுக்கத்திற்கு ஊறு நேராமல் பார்த்துக்கொள்வதுமாகிய 'வையாவிருத்தம்' என்னும் அகத்தவத்தினையும் சிம்மசந்திர முனிவர் மேற்கொண்டார்.

(வேறு)

432. யாக்கைக்கண் இச்சை நிற்கும் எழுத்தின் மேல் பழுத்த சொல்லை
வாக்கு நின்றுமிழும் அச்சொல் வசத்ததாம் செவியும் உள்ளம்
நோக்கும் அப்பொருளின் மெய்மை நுகர்ந்தெழும் தெளிவு இவற்றை
ஆக்கும் நல்லோழுக்கில் சால அருந்தவன் விரும்பிச் சென்றான்.

உடலில் உள்ள மனத்தகத்தே மேலான சிந்தனையையும், அச்சிந்தனையை வெளிப்படுத்தும் எழுத்துக்களால் அமைந்த கனிந்த சொற்களை வாயின் மூலம் வெளிப்படுத்தலும் அதை ஆர்வத்தோடு செவிவழி ஏற்றலும், கேட்டவற்றை உள்ளத்தால் சிந்தித்துணர்தலும் அதில் நம்பிக்கை வைத்து அதன்படி ஒழுகி உயர்நிலை அடைதலும் ஆகிய இவற்றை எல்லாம் அளிக்கும் மிகச்சிறந்த நூல்களைக் கற்றலாகிய 'ஸ்வாத்தியாயம்' என்னும் அகத்தவத்தினை ஆர்வத்தோடு மேற்கொண்டார்.

433. ஆர்த்த ரௌத்திரத்தச் சிந்தை அறஎறிந்து உயிரை மாற்றில்
பேர்த்து முத்திக்கண் வைக்கும் தரும சுக்கிலத் தியானம்
ஓர்த்துடன் உள்ளம்வைத்தான் உதிர்ந்தன வினைகள் பின்னைப்
பார்த்திப குமரன் சிந்தைப் பரமமாமுனிவனானான்.

ஆர்த்தம் ரௌத்திரம் என்னும் தீய சிந்தனைகளை அடியோடு ஒழித்து உயிரைப் பிறவிச் சுழலில் சிக்காது முக்திக்குச் செலுத்தும் தரும சுக்கிலத் தியானங்களின் பெருமையை உணர்ந்து அவற்றை மனத்தே பொருந்தினான். அதன் காரணமாய் பலவினைகள் உதிர்ந்தன எனவே முன்னம் அரசனாக இருந்த சிம்மச்சந்திரன் இப்போது தனது மேலான சிந்தனையினால் முனிவர்களின் மேலான நிலையை எய்தினான்.

434. பொய் சித்தம் அகற்றிஞான காட்சி நல்லொழுக்கம் பேணி
மிச்சத்தம் வேதனாதி அகத்தின் மேல் விருப்பை மாற்றி
வைத்துத்தன் காய தேச முதற்புறத்து அன்பு மாற்றி
விச்சித்தியின்றிச் சென்றான் வியுற்சர்க்க தவத்தினோடே.

பயனற்ற சிந்தனைகள் எதுவும் தோன்றாவண்ணம் விலக்கி நற்காட்சி ஞான ஒழுக்கங்களை மேற்கொண்டு தெளிவெய்தி மேலும் அவற்றைப் பேணி உள்ளத்தே தோன்றும் மித்யாத்வம் வேதத்ரயம் முதலிய அப்பற்றினை அடியோடு விலக்கி உயிரைப் பற்றிய உயர் சிந்தனையை உள்ளத்தே பொருந்தி தான் இருக்கும் இடத்தின் மீது உண்டாகும் ஆர்வத்தை மாற்றி இவற்றினின்றும் சற்றும் மாறாது நிற்றலாகிய 'வியுத்சர்க்கம்' என்னும் அகத்தவத்தினை மேற்கொண்டான்.

435. அடக்கம் ஈராறும் சிந்தை ஆறிரண்டோடும் ஒன்றித்
துடிப்பறப் பரிசை வெல்லும் தோன்றிய ஒழுக்கம் தன்னால்
தடுப்பின்றி யுலகம் மூன்றில் தன்எல்லை விரியும் போழ்தும்
வடுப்படா விபுலம் என்னும் மனப்பரி யத்தைப் பெற்றான்.

ஈராறு அடக்கம், பன்னிரு சிந்தனை இவற்றோடு மனம் ஒன்றி சலனம் தோன்றாது துன்பங்களைப் பொறுத்து வெல்லுதலாகிய உயர் ஒழுக்க ஆற்றலினால் தடையின்றி இம்மூவுலகத்திலும் தனது எல்லை அளவுபரந்து செல்கின்ற போதும் குறை எய்தாத 'விபுலமதி' என்னும் மனப்பரிய ஞானத்தைப் பெற்றான்.

436. சீரணி அடக்கம் செய்தோர் பற்றற்று ஆகாயம் செல்லும்
சாரணத் தன்மைப் பெற்று மாதவன் சரிக்கு நாளுள்
போரணி யானை வேந்தன் பூரசந்திரன் தன் சிந்தை
வாரணி முலையி னார்தம் வசம்சென்று மயக்கு நின்றே.

சிறப்பு மிக்க ஒப்பற்ற பன்னிரு அடக்கங்களை முழுமையாகப் பொருந்தி அகப்புறப் பற்றுக்களை அடியோடு நீக்கி ஒப்பற்றச் சாரணத் தன்மை எய்தி விண்வழியாக இப்பெருந்தவத்தினையுடைய முனிவன் சஞ்சரிக்கும் அதே நாட்களில் அழகிய போர் யானைகளையுடைய அரசன் பூரணச்சந்திரனுடைய மனமானது கச்சணிந்த முலைகளையுடைய மகளிரின் அழகிலே மயங்கி நிலைபெறுவதாயிற்று. அதாவது மகளிர் இன்பத்திலே மயங்கிக்கிடந்தான்.

437. இசையின்மேல் அசுண மாவும் இளையவர் முலையின் இன்பப்
பசையின்மா சுணமும் கண்ணின் புலங்களில் பறந்து வந்து
விசையினால் விளக்கின் வீழும் விட்டிலும் போன்று வேந்தன்
இசையுநாள் இராம தத்தை முனியை வந்து இறைஞ்சி னாளே.

அவ்வாறு, இசைக்கு மயங்கும் அசுணப்பறவை போன்றும், இளம் பெண்களின் முலை இன்பப்பற்றில் பாம்புகளைப் போன்றும், கட்புல இன்பக்கவர்ச்சியால் விளக்கிலே விழும் விட்டிலைப் போன்றும் பூரணச்சந்திர மன்னன் மயங்கிச் செல்லும் நாளில் அவனது தாய் இராமதத்தை சிம்மச்சந்திர முனிவரை வணங்கிப் போற்றினாள்.

438. புடையவர் மெலியப் பொங்கும் கடையவர் செல்வம் போல
இடையது மெலிய வீங்கி எழுந்திணைந் திருந்த கொங்கை
கடையவர் இடருறத்தம் கீழடி அடைவதே போல
இடையடி அடையக்கண்டு துறந்தஎம் இறைவ போற்றி.

சூழ்ந்துள்ள நல்லவர் நலிவடைய அற்பர்கள் செல்வச் செருக்கடைவது போல் இடையானது மெலிவடையும் வண்ணம் பருத்து இணைந்து நிமிர்ந்துள்ள முலைகள், கீழ் மக்கள் துன்ப மெய்திய காலத்துப் பெரியோரின் பாதங்களைப் பணிவது போல், முலைகள் தளர்ந்து இடைவரை பணிந்து தொங்கும் நிலை அறிந்து பெண்களின் கவர்ச்சி இவ்வளவு என்பதை உணர்ந்து இல்லற வாழ்வைத் துறந்துயர்ந்த இறைவனே உன்னை வணங்குகின்றேன்.

439. காம்பெனத் திரண்டு மைந்தர் உள்ளத்தைக் கனற்று மென்றோள்
பாம்பினதுரியைப் போலப் பசையற்றுத் திரையக் கண்டும்
தேம்பலில் மொழியினார்தம் திறத்துளி வெறுத்துப் போந்து
காம்புடை அடவி சேர்ந்த காவல பாதம் போற்றி.

மூங்கில் தண்டினைப் போல் திரண்ட அழகார்ந்த தோள்கள் பாம்புத் தோல் போல் பசையற்று வறட்சியாகி ஒளி குன்றி திரைதலைக் கண்டறிந்தும், இனிய மொழிகளைப் பேசும் மகளிரின் வனப்பு நிலையற்ற தன்மையை உணர்ந்தும், வெறுத்துத் துறந்து வந்து மூங்கில்கள் நிறைந்த காட்டை அடைந்து தவம் செய்கின்ற உலகின் நன்மையைப் போற்றும் உத்தமனே உன்னைப் பணிகின்றேன்.

440. பெரியவர் பாதம் சேர்ந்த பேதையர் சிந்தை போலக்
கரியமென் கூந்தல் காலத்தால் கறுப் பொழியக் கண்டும்
புரவலர் செல்வம் பார்க்கின் புற்புதம் போலு மென்றும்
மருவிய அரசு நீத்த மாதவ பாதம் போற்றி.

நன்குணர்ந்த மேலோர்களை அடைந்த பேதையரின் மனம் தூய்மையடைவது போல் கருத்த கூந்தலானது காலப் போக்கால் கருமை நீங்கி வெளுத்துப்போவதைக் கண்டும், பெருவேந்தர்களின் செல்வமும் நீர்க்குமிழியைப் போல் நீங்கும் தன்மை யுடையது என்பதை உணர்ந்தும், உனது அரசைத் துறந்து தவத்தினை ஏற்ற முனிவரே உமது பாதத்தை வணங்குகின்றேன்.

441. ஏத்தரும் குணனை இவ்வாறு ஏத்திய இராமதத்தை
பார்த்தறம் பகரக்கேட்டுப் பணிந்தனள் இருந்து பின்னும்
வார்த்தை உண்டு இறைவகேள் உன்மா தவத்திடையூறேனும்
பார்த்திபக் குமரன் பாலது என முனிபகர்க என்றான்.

வார்த்தைகளால் வாழ்த்துதற்கரிய மாமுனிவரின் நற்குணங்களை இராமதத்தை இவ்வாறு ஏத்தி வணங்கி நேரத்தை எதிர்நோக்கி முனிவர் கூறிய அறங்களைக் கேட்ட பின் பணிந்திருந்து பிறகு, முனிவனே! நான் கூறுவதற்கு மனங்கொளவேண்டும். அது யாதெனில் அரச குமாரனாகிய பூரணச்சந்திரனைப் பற்றியது என்றுரைக்க முனிவர் சொல்வாயாக என அருளினார்.

442. மங்கலத் தொழில்கள் முற்றி மணி முடி கவித்து வந்து
திங்கள் வெண்குடையின் நிழல் சீய ஆசனத் திருந்தான்
பொங்கு சாமரைகள் வீசப் பொன்மலைக் குவடு தன்னில்
சிங்க ஏறு இருந்த தொத்தான் சீயமாசேனன் மைந்தன்.

ஒருநாள் சீயசேன மன்னனுடைய மகன் பூரணச்சந்திரன் நாள்தோறும் மன்னர்களுக்கு உரிய மங்கலச் செயல்களை முடித்துக்கொண்டு மணிமுடியைச் சென்னியில் சூடி நாளோலக்க மண்டபத்தில் முழுமதி போன்ற வெண்குடையின் நிழலிலே அரியாசனத்தே

அமர்ந்திருந்தான். இரு புறமும் கவரிகள் இரட்ட பொற்சிகரத்திலே அமர்ந்திருக்கும் ஆண் சிங்கத்தைப் போல் வீற்றிருந்தான்.

443. இளம் சிங்க ஏற்றைச் சூழ்ந்த இரும்புலிப் போதகம் போல்
களம் கண்டு முழங்கும் யானைக் காவல குமரர் சூழ்ந்தார்
உளம் கொண்ட அமைச்சராதி சூழ வந்து ஊர் கோள் வட்டத்து
இளம் திங்களாகிப் பூரச்சந்திரன் இருந்திட்டானே.

இளமை மிக்க ஆண் சிங்கத்தைச் சூழ்ந்திருந்த புலிக்குட்டிகளைப் போல் போர் யானைகளையுடைய பல நாட்டு மன்னர்கள் அங்கே சூழ்ந்திருந்தார்கள். தனது உள்ளத்திற்கினிய அமைச்சர்கள் புடை சூழ பரிவட்டத்தின் இடையே இருக்கும் சந்திரனைப் போல் பூரணச்சந்திரன் இருந்தான்.

(வேறு)

444. காமத்திருவின் மஞ்சரியும் கமலத்திருவும் கடலமிர்தும்
பூமொய்த் தெழுந்த இளங் கொடியும் புனமென் மயிலு மனையார்கள்
வாமப் புருவச் சிலை கோலி மலர்க்கண் அம்பு தெரிந்து மனம்
காமக் கோமான் வில்லிகள் போல் கடிதார் மன்னன் புடை சூழ்ந்தார்.

காமனுக்குரிய ரதியைப் போலவும், தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைப் போலவும், மலர்க்கொத்தினைப் போன்றும், கடல் அமுதத்தைப் போலவும், இளமை மிக்க மலர்க்கொடி போலவும், மென்மையான காட்டு மயிலைப் போலவும் உள்ள மாதர்கள், தங்கள் புருவமாகிய வில்லினை வளைத்து கண்களாகிய அம்புகளை உள்ளத்தால் ஆய்ந்து நோக்கி எறிந்து ஆசையின் அரசனாகிய காமனது வில் வீரர்களைப் போல் மணம் மிக்க மாலைகளையணிந்த மன்னன் பூரணச் சந்திரனைச் சூழ்ந்திருந்தனர்.

(வேறு)

445. பார்த்திபர் தருநிறை கொண்டு பைம்பொனால்
ஆர்த்திஇம் மண்ணினை அமிர்தச் செப்பென
வார்க்கடங் காமுலையார் மருட்சியில்
போர்க்கடா யானையான் புரிந்து செல்லுநாள்.

மேலும் போர் யானைகளையுடைய அவ்வரசன் மற்ற மன்னர்கள் செலுத்தும் திறையைக் கொண்டு பசும்பொன்னால் தனது கருவூலமாகிய நிலவறையை நிரப்பி கச்சுக்கடங்கா அமுதச் செப்பினை நிகர்த்த முலைகளையுடைய மகளிரின் இன்ப மகிழ்ச்சியில் மூழ்கி விரும்பிக்கிடக்கின்ற நாளில்.

446. கண்மிசை அவனையான் கண்டு காவல
விண்மிசை இன்பமும் வேந்தர் செல்வமும்
புண்ணிய மிலாதவர்க் கில்லை பூமகள்
எண்ணுவதும் செயாள் என்றி யம்பினேன்.

நான் எனது கண்களால் அந் நிலையில் இருந்த காவலனைக் கண்டு மன்னனே! புண்ணியம் செய்தவர்க்கன்றி அரச செல்வமும், விண்ணுலக இன்பமும் கிட்டாது. மேலும் திருமகள் அவர்களைப் பற்றி சிந்திக்கவும் மாட்டாள் என்று எடுத்துக் கூறினேன்.

447. உருவமும் அழகும் நல்லொளியும் கீர்த்தியும்
செருவிடை வெல்வலத் திறலும் சிந்தை செய்
பொருளவை வருதலும் போகமும் நல்ல
திருவுடை அறத்தது செய்கை என்றனன்.

மேலும் வடிவம், வனப்பும், நல்ல பொலிவும், புகழும், போர்களத்தே பகைவரை வெல்லும் ஆற்றலும், விரும்பிய செல்வங்கள் வந்து சேர்வதும், இன்பமும் ஆகிய

இவையனைத்தும் மிகச்சிறந்த அறத்தினது ஆற்றலால் ஆகக்கூடியவை என்பதையும் எடுத்துரைத்தேன்.

448. நிலத்திடை அங்குரம் வித்தை நீத்திலை
மலைத்தலை மழையிலாது ஆறுதான் வர
புலத்திடை இன்பமும் இல்லை புண்ணியம்
தலைத்தலை வரச் செயாதவர்கட் கென்றனன்

அடுத்து, விதை நிலத்தில் விதைகளை விதைத்தாலன்றி பயிர்கள் தோன்றுவதில்லை. மலை முகடுகளில் மழை பெய்தால் தான் நீர் அருவிகள் கொட்டும், இவற்றைப் போல் புண்ணியத்திற்குக் காரணமாகிய விரத சீலங்களை வாய்க்குந் தோறும் செய்யாதவர் கட்கு ஐம்புல நுகர்ச்சியை அளிக்கும் இல்லற இன்பமும் இல்லாது போகும் என்றும் கூறினேன்.

449. காரணம் இல்லையேல் இல்லை காரியம்
போரணி வேலினாய் முன் செய் புண்ணியம்
காரணமாக நீ ருடுத்த கன்னியும்
சீரணி செல்வமும் செறிந்த உன்னையே.

போரிலே வெற்றியைத் தருகின்ற அழகிய வேலினையுடைய வேந்தனே, காரணமில்லாமல் எந்த ஒரு செயலும் இல்லை. எனவே நீ முற் பிறவியில் செய்த புண்ணியத்தின் காரணமாகத் தான் இப்போது கடல் சூழ்ந்த இவ்வுலக ஆட்சியும் சிறப்புமிக்க செல்வமும் உனக்குரியதாக அமைந்துள்ளன.

450. மண்ணின் மேல் மற்றிந்தச் செல்வம் மேல்வர
எண்ணி நீ புண்ணியம் ஈண்டச் செய்கெனப்
புண்ணின்மேல் பட்டவேல் போல அச்சொலை
எண்ணிடாது இகழ்ந்தவன் எழுந்து போயினான்.

எனவே மேலும் மேலும் இவ்வாட்சியும் செல்வமும் நிலைத்துப் பெருக வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்து அதற்கான புண்ணியத்தைப் புரிவாயாக என நான் கூறியதைக் கேட்ட பூரணச்சந்திரன், புண்ணில் வேல் பட்டதைப் போல் வேதனை அடைந்து எனது அறிவுரையைப் பற்றிச் சிந்திக்காது இகழ்ந்து எழுந்து சென்றுவிட்டான்.

451. புலங்கள்மேல் புரிந்தெழு பொறிகள் ஓம்பியே
விலங்கு போலே அவன் வீய்ந்து போகுமோ
இலங்குசெம் பொன்னெயில் இறைவன் நல்லறத்து
அலங்கல் வேலான் அவன் அடையுமோ சொலாய்.

எனவே, முனி புங்கவனே! அவன் ஐம்புல ஆசையில் ஆழ்ந்து மிக்க விருப்புடன் ஐம்பொறிகளின் உணர்வினைப் பூர்த்தி செய்து விலங்குகளைப் போல் வீணாக மாய்ந்து விடுவானோ, அல்லது ஒளிமிக்க பொன் மதில்களால் சூழ்ந்த சமவசரணத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவனது நல்லறத்தினை, அழகிய மாலையை அணிந்து வேலை ஏந்திய அவன் ஏற்பானோ எனக்குக் கூறுங்கள் என வேண்டினாள்.

(வேறு)

452. மாதவி உரைத்த எல்லாம் மாதவன் மனத்தை நோக்கும்
போதியின் உணர்ந்தறத்தைக் புரவலன் புரிந்து கொள்ளும்
யாது நீ கவல வேண்டாம் அதனுக்கே ஏதுவாக
ஓதுமிக் கதையைக் கேட்டு நீயவற் குரைக்க வென்றான்.

துறவினை மேற்கொண்ட இராமதத்தை உரைத்த அனைத்தையும் மாதவ முனிவனாகிய சிம்மச்சந்திரன் தனது மனப்பரிய ஞானத்தினாலே உய்த்துணர்ந்து, இறைவனது நல்லறத்தினைப் பூரணச்சந்திரன் விருப்பத்துடன் மேற்கொள்வான். நீ

அதைப்பற்றி வருந்த வேண்டாம். அவன் அறத்தை ஏற்பதற்குக் காரணமாக நான் கூறும் இக்கதையை அவனுக்கு நீ கூறுவாயாக என்று அக்கதையை முனிவர் கூறலற்றார்.

453. அடக்கத்தைப் பொதிந்து உயிர்க்கண் அருளினை ஊறுஆறித்
தொடக்கமும் முடிவும் ஒத்துத் தொடுத்ததோர் மாலை தன்னை
எடுத்துடன் நாற்றினாற் போன்று இதத்தை எவ்வுயிர்க்கும் ஆக்கும்
வடுப்பரிந் திருந்த சொல்லான் மாதவன் உரைக்க லுற்றான்.

மேலான அடக்கத்துடன் உயிர்கள் மாட்டு அருளினை உள்ளத்தே சுரக்கச் செய்து அமைதித் தன்மையுடன் தொடக்கம் முதல் முடிவுரை ஒரே தன்மையாகத் தொடுக்கப்பட்ட மலர் மாலையை அழகுடன் தொங்க வைத்தது போல், எல்லா உயிர்களுக்கும் நன்மையைச் செய்யும் குற்றமற்ற நற்குணமுடைய முனிவராகிய சிம்மச்சந்திரர் அவ்வரலாற்றினைக் கூறத் தொடங்கினார்.

பூரணச் சந்திரன் அரசியற் சருக்கம் முற்றுப் பெற்றது.